2002 ஏப்ரல் 16] [திரு. துரைமுருகன்]

வருகிறபோது, நேற்றைக்குச் சொன்ன ஒன்று தவறாகி விட்டது என்ற correction-ஐ சபையிலே சொல்லிவிட்டால் இந்தப் பிரச்சினை வராது. அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தில்... (குறுக்கீடு) புத்தகத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. சட்டசபை நடவடிக்கைக் குறிப்புதான் சட்டசபையோடு சம்பந்தப்பட்டது.

டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, இதற்கு மேலே பேச அனுமதிக்க முடியாது, விட்டுவிடுங்கள்.

டாக்டர் க. பொன்முடி: **

6. அறிவிப்பு

அரசினர் தனித் தீர்மானம் திருத்தப்பட்டவாறு அவைக் குறிப்பில் இடம் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தில் பல முக்கியமான விவரங்கள் அடங்கி உள்ளதால், இன்று நிறைவேற்றப்பட்ட திருத்தப்பட்ட தீர்மானத்தின் முதல் பத்திக்குப் பிறகு ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அரசினர் தனித் தீர்மானம் முழுவதையும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, பேரவை ஏற்பளிப்புடன் ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட அரசினர் தனித் தீர்மானம் முழுவதும் திருத்தப்பட்ட தீர்மானத்தின் முதல் பத்திக்குப் பிறகு அவைக் குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை பேரவைக்கு அறிவிக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.